# நவம்பர் – 17 – வெள்ளி
## புனித ஹங்கேரி எலிசபெத்

**ஒவ்வொரு பகலும் அடுத்த பகலுக்கு அச்செய்தியை அறிவிக்கின்றது: திபா. 19:2**

## முதல் வாசகம் : சாலமோனின் ஞானம் 13 : 1 - 9

கடவுளை அறியாத மனிதர் அனைவரும் இயல்பிலேயே அறிவிலிகள் ஆனார்கள். கண்ணுக்குப் புலப்படும் நல்லவற்றினின்று இருப்பவரைக் கண்டறிய முடியாதோர் ஆனார்கள். கைவினை களைக் கருத்தாய் நோக்கியிருந்தும் கைவினைஞரை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. மாறாக, தீயோ, காற்றோ, சூறாவளியோ, விண்மீன்களின் சுழற்சியோ, அலைமோதும் வெள்ளமோ, வானத்தின் சுடர்களோதாம் உலகை ஆளுகின்ற தெய்வங்கள் என்று அவர்கள் கருதினார்கள். அவற்றின் அழகில் மயங்கி அவற்றை அவர்கள் தெய்வங்களாகக் கொண்டார்கள் என்றால், அவற்றிற்கெல்லாம் ஆண்டவர் அவற்றினும் எத்துணை மேலானவர் என அறிந்துகொள்ளட்டும் ஏனெனில் அழகின் தலையூற்றாகிய கடவுளே அவற்றை உண்டாக்கினார். அவற்றின் ஆற்றலையும் செயல்பாட்டையும் கண்டு அவர்கள் வியந்தார்கள் என்றால், அவற்றையெல்லாம் உருவாக்கியவர் அவற்றைவிட எத்துணை வலிமையுள்ளவர் என்பதை அவற்றிலிருந்து அறிந்து கொள்ளட்டும். ஏனெனில் படைப்புகளின் பெருமையினின்றும் அழகினின்றும் அவற்றைப் படைத்தவரை ஒப்புநோக்கிக் கண்டுணரலாம். இருப்பினும், இம்மனிதர்கள் சிறிதளவே குற்றச்சாட்டுக்கு உரியவர்கள். ஏனெனில் கடவுளைத் தேடும்போதும் அவரைக் கண்டடைய விரும்பும்போதும் ஒருவேளை அவர்கள் தவறக்கூடும். அவருடைய வேலைப்பாடுகளின் நடுவே வாழும்பொழுது கடவுளை அவர்கள் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். தாங்கள் காண்பதையே நம்பிவிடுகின்றார்கள் ஏனெனில் அவை அழகாக உள்ளன. இருப்பினும், அவர்களுக்கும் மன்னிப்பே கிடையாது. உலகை ஆராய்ந்தறியும் அளவுக்கு ஆற்றல் அவர்களுக்கு இருந்த போதிலும், இவற்றுக்கெல்லாம் ஆண்டவரை இன்னும் மிக விரைவில் அறியத் தவறியது ஏன்?

**பதில்பாடல் :** வானங்கள் இறைவனின் மாட்சிமையை
வெளிப்படுத்தும்

## நற்செய்தி : லூக்கா 17 : 26 - 37

அக்காலத்தில் இயேசு கூறியது: நோவாவின் காலத்தில் நடந்தது போலவே மானிட மகனுடைய காலத்திலும் நடக்கும். நோவா பேழைக்குள் சென்ற நாள்வரை எல்லாரும் திருமணம் செய்து கொண்டும் உண்டும் குடித்தும் வந்தார்கள். வெள்ளப்பெருக்கு வந்து அவர்கள் அனைவரையும் அழித்தது. அவ்வாறே லோத்தின் காலத்திலும் நடந்தது. மக்கள் உண்டார்கள், குடித்தார்கள் வாங்கினார்கள், விற்றார்கள் நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப்போன நாளில் விண்ணிலிருந்து பெய்த தீயும் கந்தகமும் எல்லாரையும் அழித்தன. மானிடமகன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். "அந்நாளில் வீட்டின் மேல் தளத்தில் இருப்பவர் வீட்டிலுள்ள தம் பொருள்களை எடுக்கக் கீழே இறங்க வேண்டாம். அதுபோலவே வயலில் இருப்பவர் திரும்பி வரவேண்டாம். லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள். தம் உயிரைக் காக்க வழிதேடுவோர் அதை இழந்துவிடுவர் தம் உயிரை இழப்பவரோ அதைக் காத்துக் கொள்வர். நான் உங்களுக்குச் சொல்கிறேன் அந்த இரவில் ஒரே கட்டிலில் இருவர் படுத்திருப்பர். ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார் மற்றவர் விட்டு விடப்படுவார். இருவர் சேர்ந்து மாவரைத்துக் கொண்டிருப்பர். ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார் மற்றவர் விட்டுவிடப்படுவார். (இருவர் வயலில் இருப்பர். ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார் மற்றவர் விட்டு விடப்படுவார். ") அவர்கள் இயேசுவைப் பார்த்து, "ஆண்டவரே, இது எங்கே நிகழும்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "பிணம் எங்கே இருக்கிறதோ அங்கேயே கழுகுகளும் வந்து கூடும்" என்றார்.

**தியானம்:** இயேசுவின் போதனைகள் மனிதனை நல் வழியில் இட்டுச்செல்வதற்காக அளிக்கப்பட்டன. நன்னெறியை கடைப்பிடித்து வாழ்வோர் இவ்வுலகில் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவார்கள் அதே சமயத்தில் விண்ணகத்தில் நிலையான வாழ்வைப் பெற்றுகொள்வார்கள். மண்ணக வாழ்வுக்கும் விண்ணக வாழ்வுக்கும் என்ன தொடர்பு என்னும் கேள்விக்கும் இயேசு பதில் தருகின்றார். நாம் வாழுகின்ற உலகில் கடவுளின் ஆட்சி ஏற்கனவே தொடங்கிவிட்டது. ஆனால் அது நிறைவடையும் காலம் ஒரு நாள் வரும் அந்த நிறைவு காலத்தை நாம் இருவிதங்களில் பார்க்கலாம். நம் ஒவ்வொருவரின் மண்ணக வாழ்வு சாவின் காரணமாக முடிவுக்கு வரும்போது ஒருவிதத்தில் நம் நிறைவுகாலம் வந்துவிட்டது எனலாம் அதுபோல மனித குலத்தின் வரலாறு முடிவடைந்து உலகம் அனைத்துமே ஒரு நாள் கடவுளின் திட்டத்திற்கு ஏற்ப நிறைவுக்கு வரும் என்பது மற்றொரு கூற்றாகும். இந்த உலம் எப்போது முடிவுக்கு வரும் என்பது பற்றி இயேசு பதில் கூற மறுத்துவிட்டார். ஆனால் அந்த நிறைவு காலம் எப்படி இருக்கும் என்பது பற்றி ஒரு சில விளக்கங்களை இயேசு தந்துள்ளார். அதாவது உலக முடிவும் இறையாட்சியின் நிறைவும் மானிடமகனின் வருகையும் நாம் எதிர்பாராத நேரத்தில் முன்னறிவிப்பின்றியே வந்துவிடும். உலகம் அனைத்தையும் கடவுள் தீர்ப்பிடுவார். இயேசுவில் நம்பிக்கை கொண்டு நாமும் வாழ்ந்திடுவோம் ஆமென்.